*இந்த கட்டுரை தமிழ்நெட் இணையத்தில் இருந்து உலக சோசலிச வலைத் தளத்தினால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.* Tamils and World War III [https://www.tamilnet.com/art.html?catid=*99&artid=38100*]

# தமிழர்களும் மூன்றாம் உலகப் போரும்

உலகம் கொஞ்சம்கொஞ்சமாய் மூன்றாம் உலகப் போருக்குள் நுழைந்து கொண்டிருக்கிறது. இது பல வகைகளிலும் முந்தைய இரண்டு போர்களில் இருந்து மாறுபட்ட போராகும். இது சக்திகளிடையேயான யுத்தமாக அல்லாமல், உலகெங்கிலுமான மக்களுக்கு எதிரான யுத்தமாக இருக்கிறது. இதில் இலக்கு வைக்கப்படும் மக்களில் தமிழர்களும் இருக்கிறார்கள். ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினையை திசைதிருப்பவும் மட்டுப்படுத்தவுமான ஒரே புள்ளியில் முழுமையாகக் கவனத்தை குவிப்பதற்காக அத்தனை பக்கங்களில் இருந்தும் முகமைகள் அவசர அவசரமாய் நிலைநிறுத்தப்படுகின்றன என்றால், கொழும்பை மையமாகக் கொண்ட இனப்படுகொலை அமைப்பை வலுப்படுத்தி அதன்மூலமாக, வரவிருக்கும் போரில் அதனையும் அதன் இராணுவத்தையும் பயன்படுத்துவதற்கு அல்லது பிராந்தியத்தில் காலடி எடுத்து வைப்பதற்கான நோக்கத்துடன் ஆகும்.

தமிழ்நாட்டை மூலமாய் கொண்ட தமிழர்களானாலும் சரி அல்லது ஈழத்தில் இருந்தான தமிழர்களானாலும் சரி, மேற்கு அல்லது கிழக்கில் இருந்து வருகின்ற உலக ஒழுங்குகளை பரிசீலிப்பதற்கான ஒரு சோதனையாக அவர்கள் ஈழத்தமிழர்களின் பிரச்சினையை பார்க்கிறார்கள் என்ற செய்தி, தமிழர்களின் உலகளாவிய அணிதிரட்டலில் இருந்து தெளிவாக சென்று சேர்ந்தாக வேண்டும்.

சிங்கள தேசத்திற்கும் செய்தி சென்றடைய வேண்டும். அது இப்பிராந்தியத்தில் மற்ற தேசங்களை மதித்து, பிராந்தியத்தின் மக்களின் பக்கம் நிற்க விரும்புகிறதா, அல்லது மாறிக்கொண்டேயிருக்கக் கூடிய உலக அரசியலின் மீது ஏறிக் கொண்டு இனப்படுகொலை சவாரி செய்து இறுதியில் பிராந்தியத்திலும் வரலாற்றிலும் புறக்கணிக்கப்பட்டதாக ஆக விரும்புகிறதா.

தமிழ் மக்கள் கவுன்சிலானது (TPC) வலிமை மற்றும் சித்தாந்த நிலையில் இருந்து சக்திகளை சவால் செய்வதற்கு தமிழர்களையும் அதேபோன்ற பிற மக்களையும் உலகளாவ அணிதிரட்டுவதை நோக்கி நோக்குநிலையமைத்துக் கொள்ளவில்லை என்றால், அது TNA, GTF, TGTE இதரவற்றைப் போன்றே தமிழர்களை மேலும் ஏமாற்றுவதற்காய் சக்திகளின் கரங்களில் இருக்கும் இன்னுமொரு அமைப்பாகி விடும். உலக தமிழர் அணிதிரட்டலுக்காய் இல்லாதபட்சத்தில் அதன் பெயரில் தேசம் என்பதை விடுவதைக் கூட அதனால் நியாயப்படுத்த இயலாது.

சக்திகளை வழிக்குக் கொண்டுவருவதற்கு உலகளாவ அணிதிரட்டுவதை நோக்கி TPC இன் தரப்பில் இருந்து எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் முழுமனதுடன் ஆதரிக்கப்பட வேண்டும். ஆனால் TPC க்காகக் காத்திருக்காமல் உலகத் தமிழர்கள் யதார்த்தங்களுக்கு விழித்துக் கொள்ள வேண்டும்.

* * *

தமிழர்கள் தங்களது கடந்தகாலத்து கடலோடி பெருமைகளைப் பேசிக் கொண்டிருப்பது இன்று பொருத்தமற்றதாகும். அதனது எந்தவொரு அடையாளமும் உயிர்தப்பி வாழவில்லை.

தெற்காசியாவுக்கு வெளியில் கயானா முதல் ஃபிஜி வரையில் இன்று உலகளாவ தமிழர்கள் பரவியிருப்பமையானது அடிப்படையில், மேற்கிலிருந்து வந்த அல்லது மேற்கு சம்பந்தப்பட்ட காலனி ஆதிக்கம் மற்றும் போரினால் விளைந்த இரண்டு அடிமைப்படுத்தல் நடவடிக்கைகளினால் உண்டான ஒரு நிகழ்வு என்பதை தமிழர்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

ஐரோப்பிய காலனித்துவம் முதலில் அமைப்புமுறை உருக்குலைந்திருந்த தென் இந்தியத் தமிழர்களை கொத்தடிமைக் கூலிகளாகக் கொண்டு சென்றது. அதன்பின், அமெரிக்க தலைமையிலான மேற்குலகும் மற்றும் பிரிட்டிஷ் இராச்சியத்திற்கு அடுத்து வந்தவர்களும் இணைந்து நடத்திய பல தசாப்த கால இனப்படுகொலை, நவீன முறையில் அடிமைப்பட்ட ஈழத்தமிழர்களின் புலம்பெயர்ந்த அகதிகள் சமூகத்தை உருவாக்கியது. உலகின் எந்தப் பகுதியிலும் தமிழர்கள் நாடற்றவர்களாகினார். சிங்கள தேசம் இத்தகைய நிகழ்வுகளின் வழி ஒருபோதும் பயணிக்கவில்லை என்பதை கவனிக்க வேண்டும்.

தொடர்ச்சியான படுகொலையும், ஈழத்தமிழர்களின் தேசமும், பிராந்தியமும் தொடர்ந்து அழித்தொழிக்கப்படுவதும், புலம்பெயர்ந்த தமிழர்களை கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறையாகும். இவை அனைத்துமே மூன்றாம் உலகப் போர் ஏற்பாடுகளின் பகுதியாகும்.

500 ஆண்டுகளாய் தமிழர்களாய் நாடற்று இருந்ததன் மீதும் அவர்களிடையே அடிமைத்தனம் பழக்கமாகி விட்டிருக்கக் கூடிய ஒரு கூட்டத்தின் மீதும் தான் இந்த ஏற்பாட்டாளர்களின் நம்பிக்கை தங்கியிருக்கிறது.

* * *

முதல் இரண்டு உலகப் போர்கள், பிராந்தியம் மற்றும் ஆதாரவளங்களுக்கான போட்டியில் சக்திகளிடையே சண்டையிடப்பட்டது என்றால்,மூன்றாம் உலகப் போர் பல வகைகளிலும் மாறுபட்டதாகும். இதில் சம்பந்தப்பட்ட சக்திகள் உலகத்தை விண்ணில் இருந்து வந்த ஒரு பந்து போல கண்டிருக்கின்றன. இப்போது அது ஏகபோகத்தின் ஒரு கிரகமாக இருக்கிறது.

மக்களின் அரசாங்கங்கள் இல்லை மாறாக பெருநிறுவனங்களின் ஏகாதிபத்தியம் தான் இருக்கிறது. உலகின் குறிப்பிட்ட பகுதிகளை நோக்கி பொருத்தமற்ற விகிதாசாரத்தில் நோக்குநிலை கொண்டிருக்கக் கூடிய பெருநிறுவனங்கள், அரசாங்கங்கள் என்றழைக்கப்படுகின்ற ஸ்தாபகங்களைக் கட்டுப்படுத்துகின்றன. வடிவம்பெற்றிருக்கும் அத்தனை ஸ்தாபகங்களும் உலகெங்குமான மக்களுக்கு எதிராய் மூன்றாம் உலகப் போரை நடத்துவதில் ஒன்றுபட்டு நிற்கின்றன. மக்களுக்கு எதிராய் ஒரு போரைத் தொடுப்பதில், அணு ஆயுதங்களைப் பற்றிக் கவலை கொள்வதற்கு அங்கே ‘அச்சமேதும் மிச்சம்’ இல்லை.

இப்போது, மேற்காசியா, தெற்காசியாவின் தென்பகுதி மற்றும் கடலோர தென்கிழக்கு ஆசியா ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்ட சில புள்ளிகளாக இருக்கின்றன. இது உலகின் மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். தமிழர்கள் கொழும்பில் இருக்கும் முகவர் அரசுடன் உடன்படவில்லை என்பதால் அல்லது தீவை மையமாகக் கொண்டு இயக்கப்படும் திட்டநிரலுக்கு ஒத்துழைப்பாக இல்லை என்பதால் குறிவைக்கப்படும் இலக்குகளில் அவர்களும் ஒன்றாக இருக்கிறார்கள்.

* * *

இரண்டாம் உலகப் போருக்கு வெகு முன்பாக, *1931* ஆம் ஆண்டிலேயே, இரண்டு அணிகளுக்குமே மட்டை பிடிக்க சந்தர்ப்பம் கிட்டும் என்று பிரித்தானிய ஆட்டமான கிரிக்கெட்டுடன் தீவில் அறிமுகம்செய்யப்பட்ட பிரித்தானிய மாதிரி “நாடாளுமன்ற ஜனநாயகத்தை” ஒப்பிட்டுப் பேசி ஈழத் தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள்.

இரண்டாம் உலகப் போரின் சமயத்தில், போரைக் காரணம் காட்டி, தமிழர்களுக்கு தீர்வு மறுக்கப்பட்டது, போருக்குப் பின்னரோ அவர்கள் கொழும்பு மைய ஒற்றையாட்சி அமைப்புமுறைக்கு நெருக்கித் தள்ளப்பட்டார்கள்.

மூன்றாம் உலகப் போருக்கு சூடான தயாரிப்புகள் நடந்து கொண்டிருப்பதன் மத்தியில், இந்த வார ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த சுவிஸ் ஒழுங்கமைப்பிலான ஒரு கலந்தாலோசனையில், சர்வதேச சமுதாயம் என்று அழைக்கப்படுவதான ஒன்று ஈழத் தமிழர்களுடையதைப் போன்ற விவகாரங்களில் “செங்குத்தான” தீர்வுமாதிரிகளையே இப்போது தெரிந்தெடுப்பதாகப் பேசப்பட்டது. அந்த வார்த்தைநுட்பம் குறிப்பிடுகின்ற அடுக்குமுறையானது தமிழர்களை அடிமைகளுக்கு அடிமைகளாக ஆக வேண்டும் எனக் கூறுகிறது. அவ்வாறு கூறுவதன் மூலம், உலகத்தை ஒரு பந்து போலக் காணும் காலத்திற்குத் தக்கபடி ஒரு பந்து விளையாட்டை சுவிட்சர்லாந்து மனதில் கற்பனை செய்திருக்கக் கூடும்.

* * *

இனப்படுகொலை இலங்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரு களத்தை அமைக்கின்றதான இத்தகைய துணிச்சலான ஏமாற்றல்களுக்கு முகம்கொடுக்கும் நிலையில், விரிந்த சித்திரத்தைக் காணுகின்ற ஒரு சவாலான உலகளாவிய தமிழர் அணிதிரட்டலும் மற்றும் கடந்த காலத்தைக் குறித்தும் நிகழ்காலத்தைக் குறித்தும் விழிப்புடைய இளம் தலைமுறையின் அறிவொளி பெறலும் நாடற்றவர்களாக இருக்கும் தமிழர்களுக்கு நீண்டகால நோக்கில் உதவுவதாக அமையும். உலகத் தமிழர்கள் மூன்றாம் உலகப் போரின் கூட்டாளிகளில் இருந்து சுயாதீனமாய் தங்களது சொந்த வேலைத்திட்டத்தைக் கொண்டிருந்தாக வேண்டும்.

உலகில் தமிழர்களின் எண்ணிக்கை, பரவல், மற்றும் அவர்களில் உயர் திறம்படைத்தவர்கள் பல்வேறு உலக ஸ்தாபகங்களில் வேலைசெய்கின்ற நிலை அனைத்தும் இருந்தும், துரதிர்ஷ்டவசமாக இவர்களில் இருந்து, மக்களை விரிந்த சித்திரத்தில் அறிவொளி பெறச் செய்வதற்கும், தமிழர்களின் நலன்களிலான ஒரு உலகளாவிய தீர்வுக்காய் அவர்களை அணிதிரட்டுவதற்கும், சர்வதேச தரத்துடனான எந்த சுயாதீனமான புத்திஜீவி இயக்கமும் முன்வருவதாகத் தென்படவில்லை.

புத்திஜீவி இயக்கம் சர்வதேசத் தாக்கத்துடனான எந்த அர்த்தமுள்ள அரசியல் இயக்கத்துக்கும் முன்னோடியாகும்.

இது விடயமாக எந்தத் தமிழரிடம் இருந்தும் சர்வதேசத் தரத்தில் எழுத்துக்களையோ அல்லது குரலையோ காண்பது அரிதாக இருக்கிறது. சொல்லப்போனால் சக்திவாய்ந்த ஊடக சாம்ராஜ்யங்களையும் புகழ்பெற்ற புலம்பெயர் கல்வியியல் வல்லுநர்களையும் கொண்டுள்ள தமிழ்நாடு இதில் பின்தங்கி இருப்பதென்பது ஆச்சரியமளிப்பதாக இருக்கிறது.

இதற்கு நேர்மாறாக, சிங்கள உயரடுக்கினரோ, சர்வதேசக் கருத்தை வளைப்பதிலும் இனப்படுகொலை அரசுக்கு புவிமூலோபாய எஜமானர்களின் சேவைக்கேற்ற வேடம் தயாரிப்பதிலும் நீண்ட பயிற்சி பெற்றவர்களாயும் பக்குவப்படுத்த பட்டவர்களுமாயும் உள்ளனர்.

ஈழத்தமிழர்களின் இளம் தலைமுறையை தடம்மாற்றுகின்ற ஆராய்ச்சிகளிலும், திட்டங்களிலும் மற்றும் வெளியீடுகளிலும் ஈடுபடுத்துவதற்கு மேற்கில் இருக்கும் கல்வி நிறுவனங்கள் இப்போதெல்லாம் அசாதாரண ஆர்வம் காட்டுவனவாய் இருக்கின்றன. நிதியாதாரம், தொழில்வாழ்க்கை, மற்றும் செயற்கையாய் உருவாக்கப்பட்ட அங்கீகாரம் இவையெல்லாம் தூண்டில்களாய் பயன்படுத்தப்படுகின்றன. இவர்களில் நேர்மையான, உணர்திறன்மிக்க,மற்றும் உண்மையான கல்வியாளர்கள் தமது வாழ்வின் குறைந்தபட்சம் ஏதேனும் ஒருகட்டத்தில் தங்கள் கடமை என்னவாக இருக்கிறது என்பதை உணர்வார்கள்.

* * *

ஆங்கில ஊடகங்களில் காணக்கூடிய தமிழ் எழுத்தாளர்களில் மார்க்சிஸ்டுகள் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய பெரதேனிய (Peradeniya), கொழும்பு வகையின் ஒரு தரப்பினர் இருக்கின்றனர். அவர்கள் தமிழ் ஈழம் ‘‘குறும் தேசியவாதம்’’, அது செல்லுபடியாகாத ஒன்று அமெரிக்காவின் நலன்களுக்கே அது சேவை செய்யும் என்பதால் தமிழர்களுக்கான எந்த சுயாதீனமான அரசும் அல்லது எந்த தமிழ் தேசிய இயக்கமும் ஊக்குவிக்கப்படக் கூடாது என்று பழைய வாதங்களின் ஒரு பட்டியலையே இன்னமும் ஒப்பித்துக் கொண்டிருக்கின்றனர்,

அவ்வாறு கூறியதன் மூலம், எதிர்மறையான வகையில், அவர்கள் பல தசாப்தங்களாக, அமெரிக்காவின் நலன்களுக்கு சேவை செய்து கொண்டிருந்த கொழும்பை மையமாய் கொண்ட ஒரு இனப்படுகொலை அரசுக்கே வசதி செய்து தந்து கொண்டிருந்தார்கள்.

ஈழத் தமிழர்கள் தங்களது தேச உரிமைகோரலை கைவிட வேண்டும் என்று உலக சோசலிச வலைத் தளம், மூன்றாம் உலகப் போருக்கான பெருநிறுவன ஏகாதிபத்தியங்கள் இவை இரண்டுமே கோருகின்றன என்றால், அங்கே கண்டிப்பாய் ஏதோ கோளாறு இருந்தாக வேண்டும்.